**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அரூர்**
**முன்னிலை: திரு. C. விஜய் கார்த்திக், M.A.,M.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அரூர்**

***2019ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26-ம் நாள் செவ்வாய்கிழமை***
***அசல் வழக்கு எண்.100/2015***

1. ராமன்
2. காளிதாசன்
3. கண்ணதாசன்
4. ராமதாஸ்

......வாதிகள்

/ எதிராக /

1. சாக்கன்
2. காளியப்பன்
3. ராஜேந்திரன்

.....பிரதிவாதிகள்

இவ்வழக்கு 26.03.2019-ஆம் தேதி என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்த போது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.டி.வி. ஜெயராமன்.பி.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கே.பரந்தாமன்.எம்.ஏ.,எம்.எல்., அவர்கள் முன்னிலையாகியும், வாதிகளை அழைத்தபோது ஆஜரின்மையால் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

தாவா சொத்துக்களின் வாதிகளின் பாத்தியத்தை விளம்புகை செய்ய கோரியும், தாவா சொத்துக்களின் வாதிகளின் நிம்மதியான சுவாதீன அனுபவத்திற்கு பிரதிவாதிகளோ, அவருடைய ஆட்களோ, ஏஜெண்ட்களோ, யாதொரு தடையும் .தீங்கும், அழிம்பும், அக்கிரம பிரவேசமும் செய்யாதபடிக்கு பிரதிவாதிகள் பெயரில் ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை உத்திரவு பிறப்பிக்க கோரியும், தாவா செலவுகள் வாதிகளுக்கு பிரதிவாதிகளால் கிடைக்க வேண்டியும் வாதியால் இவ்வழக்கு தொடரப்பட்டுள்ளது.

வாதிகள் அழைத்தும் ஆஜரில்லை. எந்தவித பிரதிநிதித்துவமும் இல்லை. வழக்கு விசாரணைக்காக சிறப்பு பட்டியலில் போடப்பட்டது. ஏற்கனவே போதுமான வாய்ப்புகள் கொடுக்கப்பட்டது. எனவே இவ்வழக்கு செய்யத்தக்கவை செய்யாததாக கருதி தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இன்று 2019-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26-ஆம் நாளன்று என்னால் இத்தீர்ப்புரை அவையறிய பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அரூர்.

சீரான/வரைவு தீர்ப்புரை
அ.வ.எண்.100/2015
நாள்26.03.2019.